சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
e-Paper | 01 புதன்கிழமை ஜூலை 2026 | 01 Wednesday July 2026 | Switzerland Edition



## மோசமான வானிலையால் நீச்சல் நிகழ்வு ஒத்திவைப்பு

சூரிச்: சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் புதன்கிழமை நடைபெற இருந்த பிரபலமான சூரிச் ஏரிக் கடத்தல் நீச்சல் நிகழ்வு (Zurich Lake Crossing) மோசமான வானிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக நீடித்து வந்த கடும் வெப்ப அலையைத் தொடர்ந்து, இடியுடன் கூடிய மழை பெய்யும் அபாயம் அதிகரித்துள்ளதால், பாதுகாப்பு கருதி நிகழ்வை

மிகுதி 2 ஆம் பக்கத்தில்...

## காலநிலை மாற்றத்தின் தாக்கம்



# உலக சராசரியை விட இரு மடங்கு வேகத்தில் வெப்பமடையும் சுவிட்சர்லாந்து

சூரிச்: காலநிலை மாற்றத்தின் தாக்கம் உலகம் முழுவதும் தீவிரமடைந்து வரும் நிலையில், சுவிட்சர்லாந்து உலகளாவிய சராசரியை விட இரண்டு மடங்கு வேகத்தில் வெப்பமடைந்து வருவதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையமான MeteoSwiss தெரிவித்துள்ளது.

நீண்டகால வானிலைத் தரவுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின்படி, உலக சராசரியை விட சுவிட்சர்லாந்தில் வெப்பநிலை உயர்வு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இதற்கு அந்நாட்டின் புவியியல் அமைப்பும், ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் வேகமாக உருகி வரும் பனிப்பாறைகளும் முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

சுவிட்சர்லாந்து கடலால் சூழப்படாத நிலப்பரப்பைக் கொண்ட நாடாக இருப்பதால், கடல்கள் இயல்பாக உறிஞ்சும்

மிகுதி 2 ஆம் பக்கத்தில்...



## சுவிட்சர்லாந்தில் பட்டாசுகளுக்கு கட்டுப்பாடு

பெர்ன்: சுவிட்சர்லாந்தில் பட்டாசு பயன்பாட்டிற்கு கட்டுப்பாடு விதிக்கும் மக்கள் முன்முயற்சி (Feuerwerksinitiative) தொடர்பான இறுதி முடிவை பொதுமக்களே வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்க உள்ளனர். இந்த விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளக்

மிகுதி 2 ஆம் பக்கத்தில்...

## சூரிச், விண்டர்தூரில் குறைந்தபட்ச ஊதியத்திற்கு கூட்டாட்சி நீதிமன்றம் பச்சைக்கொடி

சூரிச்: சுவிட்சர்லாந்தின் சூரிச் மற்றும் விண்டர்தூர் நகரங்களில் குறைந்தபட்ச ஊதிய முறையை அமல்படுத்துவதற்கு சுவிஸ் கூட்டாட்சி நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. பல ஆண்டுகளாக நீடித்த சட்டப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள இந்தத் தீர்ப்பு, குறைந்த வருமானம் பெறும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முக்கிய நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற மக்கள் வாக்கெடுப்பில், இரு நகரங்களிலும் குறைந்தபட்ச ஊதிய முறைக்கு பெரும்பான்மையான வாக்காளர்கள்

மிகுதி 2 ஆம் பக்கத்தில்...

## பாசெல் பல்கலைக்கழக மருத்துவமனையில் இதய அறுவைச் சிகிச்சைக்கு ‘டா வின்சி’ ரோபோ பயன்பாடு



பாசெல்: சுவிட்சர்லாந்தின் பாசெல் பல்கலைக்கழக மருத்துவமனையில் (University Hospital Basel) இதய அறுவைச் சிகிச்சைகளுக்காக முதல்முறையாக ‘டா வின்சி’ (Da Vinci) ரோபோ அறுவைச் சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நவீன தொழில்நுட்பம் மருத்துவத் துறையில் புதிய முன்னேற்றமாகக் கருதப்பட்டாலும், அதன் செலவு மற்றும் உண்மையான மருத்துவப் பயன்கள் குறித்து நிபுணர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

மிகுதி 2 ஆம் பக்கத்தில்...

## சூரிச், விண்டர்தூரில் குறைந்தபட்ச ←

ஆதரவு தெரிவித்திருந்தனர். சூரிச் நகரில் 69 சதவீத வாக்காளர்கள் ஆதரவளித்ததைத் தொடர்ந்து, ஒரு மணி நேரத்திற்கான குறைந்தபட்ச ஊதியம் 23.90 சுவிஸ் பிராங்குகளாக நிர்ணயிக்கப்பட்டது. விண்டர்தூரில் 65 சதவீத ஆதரவுடன், ஒரு மணி நேரத்திற்கு 23 பிராங்குகள் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டது.

எனினும், இந்த முடிவை எதிர்த்து வர்த்தக சபையும் முதலாளிகள் சங்கமும் நீதிமன்றத்தை நாடின. 2024 ஆம் ஆண்டு சூரிச் நிர்வாக நீதிமன்றம், நகராட்சிகளின் இந்த முடிவு மாநிலச் சட்டத்திற்கு முரணானது என்று தீர்ப்பளித்து, குறைந்தபட்ச ஊதியத் திட்டத்தை ரத்து செய்தது.

அந்தத் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை விசாரித்த சுவிஸ் கூட்டாட்சி நீதிமன்றம், நகராட்சிகளின் முடிவை ஆதரித்து முக்கிய தீர்ப்பை வழங்கியுள்ளது. சமூக நலன் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சூரிச் மற்றும் விண்டர்தூர் நகரங்களுக்கு போதுமான தன்னாட்சி அதிகாரம் இருப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேலும், முழுநேரம் உழைத்தும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் தொழிலாளர்கள் (Working Poor), அரசின் சமூக நிதியுதவிகளை சார்ந்திருக்காமல் தங்களது வருமானத்தின் மூலம் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்த இந்தக் குறைந்தபட்ச ஊதிய முறை உதவும் என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தீர்ப்பை சுவிஸ் தொழிற்சங்க கூட்டமைப்பு வரவேற்றுள்ளது. 'மிகக் குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்க்கையில் இது உண்மையான முன்னேற்றத்தை ஏற்படுத்தும்' என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை, சமூக ஜனநாயகக் கட்சியின் இணைத் தலைவர் செட்ரிக் வெர்முத், இந்தத் தீர்ப்பை 'வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம்' எனக் குறிப்பிட்டு, தொழிலாளர் உரிமைகளை வலுப்படுத்தும் முக்கிய வெற்றியாக பாராட்டியுள்ளார்.

## மோசமான வானிலையால் ←

ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சூரிச் நகர விளையாட்டுத் துறை திங்கள்கிழமை அறிவித்துள்ளது.

இதன்படி, இந்த நிகழ்வு ஜூலை 8 ஆம் தேதி, புதன்கிழமை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அன்றும் வானிலை சாதகமாக இல்லாவிட்டால், கோடை விடுமுறைக்குப் பிறகு ஆகஸ்ட் 19 ஆம் தேதி அடுத்த மாற்றுத் தேதியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வை நடத்தலாமா என்பது குறித்து, ஒவ்வொரு முறையும் திட்டமிடப்பட்ட தேதிக்கு முந்தைய திங்கட்கிழமையன்று வானிலை நிலைமையை மதிப்பீடு செய்து இறுதி முடிவு எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பங்கேற்பாளர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, இந்த ஏரிக் கடத்தல் நீச்சல் போட்டி நிலையான மற்றும் சாதகமான வானிலையில் மட்டுமே நடத்தப்படும். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 9,000 பேர் இந்த நிகழ்வில் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

## பாசெல் பல்கலைக்கழக... ←

இதய அறுவைச் சிகிச்சைப் பிரிவின் தலைமை மருத்துவர் டாக்டர் ஹசீனா பராக்கி (Hassina Baraki) தலைமையில் சமீபத்தில் பைபாஸ் (Bypass) அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. வழக்கம்போல் நோயாளியின் அருகில் நின்று அறுவைச் சிகிச்சை செய்வதற்குப் பதிலாக, சில மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கணினி கட்டுப்பாட்டு மையத்தில் அமர்ந்தபடி ரோபோவின் உதவியுடன் அவர் அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டார்.

இந்த முறையில் மார்புக் கூட்டை முழுமையாகத் திறக்காமல், மிகச் சிறிய துளைகள் வழியாக ரோபோவின் கருவிகள் உடலுக்குள் செலுத்தப்படுகின்றன. மருத்துவரின் கை அசைவுகளை மிகத் துல்லியமாக ரோபோ செயல்படுத்துவதால், குறைந்த காயங்களுடன் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள முடிகிறது.

ஆரம்பத்தில் ரோபோ தொழில்நுட்பத்திற்குப் பழகுவதற்கு சிறிது காலம் பிடித்ததாகக் கூறும் டாக்டர் பராக்கி, தற்போது அறுவைச் சிகிச்சைப் பகுதியை பல மடங்கு பெரிதாக்கி மிகத் தெளிவாகக் காண முடிவது ஒரு முக்கிய நன்மை என்கிறார். இதனால் நோயாளிகளுக்கு குறைந்த வலி ஏற்படுவதுடன், அவர்கள் விரைவாக குணமடைந்து மருத்துவமனையை விட்டு வீடு திரும்பவும் முடிகிறது என்று அவர் விளக்கினார்.

ஆனால், இந்த தொழில்நுட்பத்தின் பயன் குறித்து அனைத்து நிபுணர்களும் ஒரே கருத்தில் இல்லை.

ஜெனீவா பல்கலைக்கழக பேராசிரியரும், Swiss Medical Board முன்னாள் தலைவர் கிறிஸ்டோஃப் மெயர் (Christoph Meier) கூறுகையில், ரோபோ தொழில்நுட்பம் ஆச்சரியமளிப்பதாக இருந்தாலும், இது வழக்கமான அறுவைச் சிகிச்சையை விட மருத்துவ ரீதியில் கணிசமான நன்மைகளை வழங்குகிறது என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இன்னும் இல்லை என்றார்.

மேலும், ஒரு டா வின்சி ரோபோவின் விலை பல மில்லியன் சுவிஸ் பிராங்குகள் என்பதுடன், பராமரிப்புச் செலவுகளும் அதிகமாக உள்ளன. ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் சுமார் 5,000 சுவிஸ் பிராங்குகள் கூடுதல் செலவாகும் என மதிப்பிடப்படுவதாக அவர் தெரிவித்தார். அந்த நிதியை செவிலியர் சேவைகள் போன்ற பிற சுகாதாரத் துறைகளில் பயன்படுத்துவது அதிக பயன் தரக்கூடும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

இதற்கு பதிலளித்த டாக்டர் பராக்கி, குறைந்த காயம், விரைவான குணமடைதல் மற்றும் மருத்துவமனையில் தங்கும் நாட்கள் குறைவது போன்ற நன்மைகள் இந்தச் செலவை நியாயப்படுத்துகின்றன என்றார். அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகளும் இதனை ஆதரிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜெர்மனியின் ஹாம்பர்க் நகரிலுள்ள மார்டினி கிளினிக் (Martini&Klinik) ரோபோ அறுவைச் சிகிச்சை திட்டத்தின் இயக்குநரும் சிறுநீரக அறுவைச்சிகிச்சை நிபுணருமான அலெக்சாண்டர் ஹேசே (Alexander Haese), இந்த தொழில்நுட்பத்தின் நன்மைகளே அதன் குறைபாடுகளை விட அதிகம் எனக் கூறியுள்ளார். பல்கலைக்கழக மருத்துவமனைகள் இத்தகைய மருத்துவப் புதுமைகளை ஏற்று மேலும் மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அதேவேளை, சுவிட்சர்லாந்தில் இத்தகைய சிக்கலான இதய அறுவைச் சிகிச்சைகள் குறைந்த எண்ணிக்கையிலேயே நடைபெறுவதால், அதன் நீண்டகால பயன்களை உறுதிப்படுத்த போதுமான தரவுகள் இன்னும் இல்லை என்று பேராசிரியர் கிறிஸ்டோஃப் மெயர் தெரிவித்துள்ளார். எனவே, இவ்வகை சிகிச்சைகளை குறிப்பிட்ட சில சிறப்பு மருத்துவ மையங்களில் மட்டுமே மேற்கொள்வது பொருத்தமானதாக இருக்கும் என்றும் அவர் பரிந்துரைத்துள்ளார்.

தற்போது பாசெல் பல்கலைக்கழக மருத்துவமனை, ரோபோ உதவியுடன் இதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் சுவிட்சர்லாந்தின் முன்னோடி மருத்துவமனையாக திகழ்கிறது. இதுவரை சுமார் 12 நோயாளிகளுக்கு இந்த முறையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பாசெல் எதிர்காலத்தில் இந்தத் துறைக்கான தேசிய சிறப்பு மையமாக உருவெடுக்குமா என்பது தொடர்ந்து கவனிக்கப்படும் விடயமாக உள்ளது.

## சுவிட்சர்லாந்தில் பட்டாசுகளுக்கு ←

கூடிய சமரசத் தீர்வு எட்டப்படாததால், மக்கள் வாக்கெடுப்புக்கு செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பட்டாசு பயன்பாட்டைக் கட்டுப்படுத்தக் கோரும் முன்முயற்சியை முன்னெடுத்து வரும் குழுவும் அதனை ஆதரிக்கும் அமைப்பும் இணைந்து, இந்த விவகாரத்தை நேரடியாக மக்களின் தீர்ப்புக்குக் கொண்டு செல்ல முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளன. இந்த முன்முயற்சியின் நோக்கம், கொண்டாட்டங்களுக்கு எதிராக அல்ல; மாறாக, அதிக சத்தம் ஏற்படுத்தும் பட்டாசுகளால் மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதே என பிரச்சாரக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இந்த முன்மொழிவுக்கு மாற்றாக, அதிக சத்தம் எழுப்பும் வெடிகளை (B5ller) மட்டும் நாடு முழுவதும் தடை செய்யும் மறைமுக சமரசத் திட்டத்தை தேசிய அவை (National Council) பரிசீலித்தது. அதனுடன், தனிநபர்கள் வெளிநாடுகளில் இருந்து பட்டாசுகளை கொண்டு வருவதற்கும் கடுமையான விதிமுறைகள் கொண்டு வரப்படவிருந்தன. ஆனால் அந்தத் திட்டத்திற்கு தேசிய அவையில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள முன்முயற்சிக் குழுவினர், நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட 'வெடி தடை' என்பது ஒரு போலியான சமரசம் மட்டுமே என்று விமர்சித்துள்ளனர். சந்தையில் விற்பனை செய்யப்படும் அதிக சத்தமுள்ள பட்டாசுகளில் வெடிகள் மிகச் சிறிய பகுதியே என்றும், அந்தத் திட்டம் மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்காது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டு gfs.bern ஆய்வு நிறுவனத்தால் நடத்தப்பட்ட பிரதிநிதித்துவ கருத்துக்கணிப்பின்படி, வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களில் 68 சதவீதம் பேர் இந்த முன்முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அரசியல் கட்சி வேறுபாடுகளைத் தாண்டியும் இந்த ஆதரவு காணப்படுவதாக அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

அதேவேளை, தேசிய தினம் உள்ளிட்ட முக்கியமான பொது நிகழ்வுகளில் அரசு அல்லது உள்ளூராட்சி நிர்வாகங்கள் நடத்தும் பொதுப் பட்டாசுக் காட்சிகளுக்கு எந்தத் தடையும் இருக்காது என முன்முயற்சிக் குழுவினர் வலியுறுத்தியுள்ளனர். மேலும், குறைந்த சத்தம் எழுப்பும் ‘வுல்கானோ’ (Volcano) போன்ற பட்டாசுகளை தொடர்ந்து பயன்படுத்தவும் அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எபலர், பிறருக்கும் விலங்குகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையூறு ஏற்படுத்தாத வகையில், அனைவரும் இணைந்து மகிழக்கூடிய புதிய கொண்டாட்ட முறைகளை விரும்புகின்றனர் என முன்முயற்சிக் குழுவைச் சேர்ந்த கொரின் மைஸ்டர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, Vier Pfoten Schweiz (Four Paws Switzerland) அமைப்பின் சுவிட்சர்லாந்து பிரிவு இயக்குநர் காட்யா ஷோனன்பெர்கர், எதனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்படும் பெரிய பட்டாசுப் பெட்டிகள் மற்றும் சக்திவாய்ந்த ராக்கெட்டுகள்தான் அதிக சத்தத்தையும், பாதுகாப்பு அபாயங்களையும் உருவாக்குகின்றன. அவை மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று தெரிவித்துள்ளார்.

## காலநிலை மாற்றத்தின் தாக்கம் ←

வெப்பத்தை சமநிலைப்படுத்தும் பாதுகாப்பு இங்கு கிடைப்பதில்லை. இதனால் நிலப்பரப்பில் வெப்பம் விரைவாக அதிகரிக்கிறது.


மேலும், ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் உள்ள பனிப்பாறைகள் மற்றும் பனிக்கட்டிகள் வேகமாக உருகி வருவதால், சூரிய ஒளியை பிரதிபலிக்கும் இயற்கைத் திறன் (Albedo Effect) குறைந்து வருகிறது. பனி உருகிய பின்னர் வெளிப்படும் பாறைகளும் மண்ணும் அதிக வெப்பத்தை உறிஞ்சுவதால், வெப்பமயமாதல் மேலும் தீவிரமடைகிறது.

1864 ஆம் ஆண்டு முதல் சேகரிக்கப்பட்ட பதிவுகளின்படி, சுவிட்சர்லாந்தின் அனைத்துப் பகுதிகளிலும் வெப்பநிலை உயர்ந்துள்ளது. குறிப்பாக, ஆல்ப்ஸ் மலையின் தெற்குப் பகுதியை விட வடக்குப் பகுதியில் சுமார் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிக வெப்பநிலை உயர்வு பதிவாகியுள்ளது. 1940-களுக்குப் பிறகு வடக்குப் பகுதியில் கடுமையான குளிர்காலங்கள் குறைந்ததே இதற்கான முக்கிய காரணமாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உலகிலேயே மிக வேகமாக வெப்பமடைந்து வரும் கண்டமாக ஐரோப்பா மாறியுள்ள நிலையில், காலநிலை மாற்றத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 20 நாடுகளில் 15 நாடுகள் ஐரோப்பாவில் அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த 60 ஆண்டுகளில் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தியதன் விளைவாக காற்றில் இருந்த தூசித் துகள்கள் (Aerosols) கணிசமாகக் குறைந்துள்ளன. இதனால் சூரிய ஒளி நேரடியாக நிலப்பரப்பை அடைந்து வெப்பநிலையை மேலும் உயர்த்துகிறது.

சுற்றுச்சூழலுக்கு சாதகமான இந்த மாற்றம், குறுகிய காலத்தில் வெப்பநிலை அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளதும் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதிகரித்து வரும் வெப்ப அலைகள் முதியவர்கள் உள்ளிட்ட பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு பெரும் சவாலாக மாறியுள்ளன. அதேவேளை, விவசாய உற்பத்தி பாதிப்பு, பனிப்பாறைகள் உருகுவதால் ஏற்படும் இயற்கை பேரிடர் அபாயம் உள்ளிட்ட பல்வேறு சவால்களும் அதிகரித்து வருகின்றன.

இனிவரும் ஆண்டுகளிலும் சுவிட்சர்லாந்தின் வெப்பநிலை மற்ற நாடுகளை விட வேகமாக உயரும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளதால், காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப புதிய சூழலுக்கு மக்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

# சுவிட்சர்லாந்தில் ஜூன் மாத வெப்ப சாதனை




பாசெல்: சுவிட்சர்லாந்தில் நிலவி வரும் கடுமையான வெப்ப அலை காரணமாக, ஜூன் மாதத்திற்கான புதிய வெப்பநிலை சாதனை சனிக்கிழமையன்று பதிவாகியுள்ளது. நாட்டின் வடக்குப் பகுதியான பாசெலில் வெப்பநிலை 39 டிகிரி செல்சியஸை எட்டியுள்ளதாக சுவிட்சர்லாந்தின் தேசிய வானிலை ஆய்வு மையமான MeteoSwiss தெரிவித்துள்ளது.

பாசெல்/பின்னிங்கன் வானிலை நிலையத்தில் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் (1130 GMT) இந்த வெப்பநிலை பதிவாகியுள்ளது. இதன் மூலம் வெள்ளிக்கிழமை பதிவான 38.8KC என்ற சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முந்தைய நாளான வியாழக்கிழமையன்று 38KC பதிவாகியிருந்த நிலையில், தொடர்ந்து மூன்றாவது நாளாக புதிய வெப்ப சாதனை உருவாகியுள்ளது.

இந்த வெப்ப அலைக்கு முன்பு, சுவிட்சர்லாந்தின் ஜூன் மாத அதிகபட்ச வெப்பநிலை சாதனை சுமார் 80 ஆண்டுகளாக 36.9KC ஆகவே இருந்து வந்தது. தற்போது அந்தச் சாதனை குறிப்பிடத்தக்க அளவில் முறியடிக்கப்பட்டுள்ளது.

மேலும், 1897 ஆம் ஆண்டு முதல் வானிலை பதிவுகள் தொடங்கப்பட்டதிலிருந்து, பாசெல் வானிலை நிலையத்தில் எந்த மாதத்திலும் பதிவாகாத மிக உயர்ந்த வெப்பநிலையாக 39KC அமைந்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் மிகப்பெரிய நகரமான சூரிச் உட்பட பல நகரங்களிலும் வரலாறு காணாத வெப்பநிலைகள் பதிவாகியுள்ளன. சூரிச்சில் 37.1KC வெப்பநிலை பதிவாகி, 2003 ஆகஸ்ட் மாதத்தில் பதிவான 36KC என்ற முந்தைய சாதனையை முறியடித்துள்ளது.

இந்நிலையில், சுவிட்சர்லாந்தின் வரலாற்றிலேயே அதிகபட்ச வெப்பநிலை 2003 ஆகஸ்ட் 11 ஆம் தேதி தெற்குப் பகுதியில் உள்ள கிராபுண்டன் மாகாணத்தின் குரோனோ பகுதியில் பதிவான 41.5KC ஆகும்.

தற்போது ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளை தாக்கியுள்ள இந்த வெப்ப அலை, திங்கட்கிழமை முதல் சுவிட்சர்லாந்தில் படிப்படியாகக் குறையும் என MeteoSwiss எதிர்பார்த்துள்ளது.

எனினும், ஐரோப்பா முழுவதும் கடுமையான வெப்பம் தொடர்கிறது. அஊக செய்தி நிறுவனத்தின் பகுப்பாய்வின்படி, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் டென்மார்க் உள்ளிட்ட பல நாடுகள் அண்மைய நாட்களில் புதிய வெப்ப சாதனைகளை பதிவு செய்துள்ளன. சனிக்கிழமையன்று மட்டும் ஐரோப்பாவில் சுமார் 20 கோடி மக்கள் 35KC-க்கும் அதிகமான வெப்பநிலையை எதிர்கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தின் தாக்கம் தீவிரமடைந்து வரும் நிலையில், ஐரோப்பா முழுவதும் வெப்ப அலைகளின் அடிக்கடி நிகழ்தலும், அவற்றின் தீவிரமும் அதிகரித்து வருவதாக காலநிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

# 1.4 லட்சம் டொன்களுக்கும் அதிகமான மின்னணு கழிவுகள் மறுசுழற்சி



சுவிட்சர்லாந்தில் கடந்த ஆண்டில் மட்டும் 1 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் (140,000) அதிகமான டன்கள் எலக்ட்ரானிக் மற்றும் மின்சாரக் கழிவுகள் வெற்றிகரமாக மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளதாக புதிய தொழில்நுட்ப அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

'சென்ஸ் இ-ரீசைக்கிளிங்' (Sens eRecycling) மற்றும் 'ஸ்விகோ ரீசைக்கிளிங்' (Swico Recycling) ஆகிய முன்னணி மின்னணு கழிவு மறுசுழற்சி நிறுவனங்கள் இணைந்து இந்த கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளன.

இந்த சிறப்பான மறுசுழற்சி நடவடிக்கையின் மூலம், சுவிட்சர்லாந்து நாட்டின் ஒட்டுமொத்த ஆண்டு சுற்றுச்சூழல் பாதிப்பு விகிதம் சுமார் 1% வரை குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**படம் சொல்லும் செய்தி...**



சுவிட்சர்லாந்தில் கடுமையான வெப்பம் காரணமாக கால் நடைகள் வெப்பத்தை தனிக்க சிறிய மரத்தின் கீழ் கூட்டமாக...

# சுவிட்சர்லாந்தில் குறைந்தபட்ச சுகாதாரக் காப்புறுதி கழிவுத்தொகையை உயர்த்த அரசின் திட்டம்




## வலதுசாரி கட்சிகள் ஆதரவு; இடதுசாரிகள், தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு

பெர்ன்: சுவிட்சர்லாந்தில் கட்டாய சுகாதாரக் காப்புறுதியின் (Health Insurance) குறைந்தபட்ச ஆண்டு கழிவுத்தொகையை (Deductible) தற்போதைய 300 சுவிஸ் பிராங்குகளிலிருந்து 400 பிராங்குகளாக உயர்த்தும் திட்டத்தை கூட்டாட்சி அரசு முன்னெடுத்து வருகிறது. இந்த முன்மொழிவு நாட்டின் அரசியல் வட்டாரத்தில் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நடைமுறையின் படி, காப்புறுதி பெற்றவர்கள் ஒவ்வொரு ஆண்டும் முதல் 300 பிராங்குகள் வரை மருத்துவச் செலவுகளை தாங்களே ஏற்க வேண்டும். அதன் பின்னரே காப்புறுதி நிறுவனம் செலவுகளை ஈடுசெய்யத் தொடங்கும். மேலும், அதன் பிறகும் குறிப்பிட்ட உச்சவரம்பு வரை மருத்துவச் செலவுகளில் 10 சதவீதத்தை நோயாளிகளே செலுத்த வேண்டும்.

அரசின் கருத்துப்படி, இந்த கழிவுத்தொகையை 400 பிராங்குகளாக உயர்த்துவதன் மூலம் தனிநபர் பொறுப்புணர்வு அதிகரிப்பதோடு, சுகாதாரச் செலவினங்களின் அதிகரிப்பையும் கட்டுப்படுத்த முடியும்.

இந்த முன்மொழிவு தொடர்பான ஆலோசனைக் காலம் திங்கட்கிழமையுடன் நிறைவடைந்துள்ளது. வலதுசாரி சுவிஸ் மக்கள் கட்சி (SVP/UDC), சுதந்திர ஜனநாயகக் கட்சி (FDP/PLR) மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் கூட்டமைப்பான கணூடிணி.ண்தீடிண்ண் ஆகியவை இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக குறைந்தபட்ச கழிவுத்தொகையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. ஆனால் மருத்துவச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால், இந்த உயர்வு காலத்தின் தேவையாகும் என்றும், இதன் மூலம் காப்புறுதி பிரீமிய உயர்வின் அழுத்தம் ஓரளவு குறையும் என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

இதற்கும் மேலாக, சுவிஸ் மக்கள் கட்சி, சுகாதாரச் செலவின உயர்வுக்கு ஏற்ப ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் கழிவுத்தொகையை தானாகவே உயர்த்தும் முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. அதன்படி, அடுத்த கட்டமாக குறைந்தபட்சகழிவுத்தொகையை 450 பிராங்குகளாக உயர்த்தவும், நோயாளிகள் செலுத்த வேண்டிய அதிகபட்ச பங்களிப்பை 1,200 பிராங்குகளாக அதிகரிக்கவும், புதிதாக குடியேறுபவர்கள் மற்றும் எல்லைத்தாண்டி வேலைக்குச் செல்வோருக்குத் தனிப்பட்ட கழிவுத்தொகை முறையை அறிமுகப்படுத்தவும் அக்கட்சி பரிந்துரைத்துள்ளது.

மறுபுறம், இந்தத் திட்டத்திற்கு இடதுசாரி கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமூகப் பணியாளர்களின் அமைப்பான Avenir Social மற்றும் சுவிஸ் நகரங்களின் ஒன்றியம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்த மாற்றம் சுகாதாரச் செலவுகளை குறைக்காது; மாறாக, வயதானவர்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்மீது கூடுதல் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர். குறிப்பாக, பெண்கள் அதிகளவில் மருத்துவச் சேவைகளைப் பயன்படுத்துவதாலும், பெரும்பாலும் குறைந்தபட்சகழிவுத்தொகை திட்டத்தையே தேர்வு செய்வதாலும், இந்த மாற்றத்தால் அவர்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அமைப்பு ஒன்றின் தகவலின்படி, 2025 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தில் ஐந்தில் ஒருவருக்கு நிதிச்சுமை காரணமாக மருத்துவரைச் சந்திப்பதை தள்ளிப்போடவோ அல்லது முற்றிலும் தவிர்க்கவோ நேர்ந்துள்ளது. கழிவுத்தொகை உயர்த்தப்பட்டால், மேலும் பலர் சிகிச்சையை தாமதப்படுத்தும் நிலை உருவாகும்; இதனால் எதிர்காலத்தில் உடல்நலப் பாதிப்புகளும் மருத்துவச் செலவுகளும் அதிகரிக்கக்கூடும் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். இதை கைவிடக் கோரி மனுவொன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தச் சீர்திருத்தம் காப்புறுதி நிறுவனங்களின் செலவைக் குறைத்தாலும், அதன் சுமை மாநில அரசுகள் மற்றும் நகராட்சிகள்மீது விழும் என்றும் எதிர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உதாரணமாக, இந்த மாற்றம் நடைமுறைக்கு வந்தால் சூரிச் நகராட்சிக்கு ஆண்டுக்கு சுமார் 20 லட்சம் சுவிஸ் பிராங்குகள் கூடுதல் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மாநில சுகாதார இயக்குநர்களின் சுவிஸ் மாநாடு, ஒரு முறை மட்டும் கழிவுத்தொகையை 400 பிராங்குகளாக உயர்த்துவதை சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாகக் கருதுகிறது. ஆனால், எதிர்காலத்தில் மருத்துவச் செலவுகளுடன் தானாக இணைத்து தொடர்ந்து உயர்த்தும் முறைக்கு அது ஆதரவு அளிக்கவில்லை.

அதேபோல், மத்திய (Centre) கட்சியும் முதற்கட்டமாக கழிவுத்தொகையை உயர்த்துவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதுடன், அதன் விளைவுகளை மதிப்பீடு செய்த பிறகே தானியங்கி உயர்வு குறித்து முடிவு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. மேலும், சுகாதாரச் செலவுகளைக் கட்டுப்படுத்த நோயாளிகளிடம் கூடுதல் தொகை வசூலிப்பதை விட, விரிவான கட்டமைப்பு சீர்திருத்தங்களே நீண்டகாலத் தீர்வாக இருக்கும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

# உலகின் முதல் தர நாடாக மீண்டும் சுவிட்சர்லாந்து



-கல்லாறு சதீஷ்-
சுவிற்சர்லாந்து

## தரவுகளும் தர்மங்களும் சந்திக்கும் தேசம்

2026 ஆம் ஆண்டிற்கான U.S. News Best Countries தரவரிசையில் சுவிட்சர்லாந்து மீண்டும் உலகின் சிறந்த நாடாக முதலிடம் பெற்றுள்ளது. உலகின் நூறு நாடுகள் மதிப்பீடு செய்யப்பட்ட இந்த தரவரிசையில் சுவிட்சர்லாந்து எட்டாவது முறையாக முதலிடத்தை அடைந்துள்ளது. இது ஒரு சாதாரண செய்தி அல்ல. ஒரு நாட்டின் வெற்றியைப் பற்றிய அறிவிப்பு மட்டுமல்ல. மனித நாகரிகம் எந்தப் பாதையில் நடந்தால் உயரத்தை அடைய முடியும் என்பதற்கான உலகின் அங்கீகாரமாகும்.

இந்த ஆண்டு ரு.ளு. நேறள நிறுவனம் தனது மதிப்பீட்டு முறையை முழுமையாக மாற்றியுள்ளது. பொதுமக்களின் அபிப்பிராயங்களையும் புகழையும் தாண்டி, 100 அளவுகோல்கள் மற்றும் 24 துணைப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட தரவு சார்ந்த ஆய்வு முறையிலேயே இந்தத் தரவரிசை உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது, இது ஒரு நாட்டைப் பற்றிய கற்பனையின் வெற்றி அல்ல் உண்மையின் வெற்றி. அந்த உண்மை சுவிட்சர்லாந்தை மீண்டும் உலகின் உச்சியில் நிறுத்தியுள்ளது.

சுவிட்சர்லாந்து பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லாட்சி ஆகிய இரு முக்கிய பிரிவுகளில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. வாய்ப்புகள், கலாச்சாரம், சுற்றுலா ஆகிய துறைகளில் இரண்டாம் இடத்தையும், சுகாதாரத்தில் நான்காம் இடத்தையும் பெற்றுள்ளது. இவை வெறும் எண்கள் அல்ல. ஒரு தேசத்தின் வாழ்க்கைத் தரத்தை அளக்கும் இதயத் துடிப்புகள்.

ஆனால் இந்த வெற்றியின் இரகசியம் எங்கே இருக்கிறது?

சுவிட்சர்லாந்தின் மலைகளிலா?

அதன் வங்கிகளிலா?

அதன் செல்வத்திலா? அல்ல.

அதன் சிந்தனையில்தான்.

சுவிட்சர்லாந்திற்கு கடல் இல்லை. ஆனால் பக்கத்து நாடுகளின் கடல்களில் ஆவியாகும் நீராவி ஆல்ப்ஸ் மலைத்தொடர்களைத் தாக்கி மழையாக இந்த நாட்டில் பொழிகிறது. கடல் இல்லாத நாடு ஐரோப்பாவின் நீர்த்தொட்டியாக மாறியுள்ளது.

இயற்கை இங்கே ஒரு பாடத்தை கற்பிக்கிறது.

எல்லா வளங்களும் நமக்குள் இருக்க வேண்டியதில்லை. அவற்றை வரவேற்கும் அறிவும், பாதுகாக்கும் பண்பும் இருந்தால் போதும்.

சுவிட்சர்லாந்தில் தங்கச் சுரங்கங்கள் கிடையாது. ஆப்பிரிக்காவின் ஆழமான மண்ணில் கிடைப்பதைப் போல தங்கம் இங்கே கிடைக்காது. ஆனால் உலகின் பெரும்பாலான தங்கம் சுத்திகரிக்கப்படும் மையங்களில் சுவிட்சர்லாந்து முன்னணியில் நிற்கிறது. உலகின் பல நாடுகளின் தங்கம் இங்கு வந்து மதிப்பைப் பெறுகிறது.

தங்கத்தை உற்பத்தி செய்யாத நாடு, தங்கத்தின் மீது உலகின் நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. இதுவே சுவிட்சர்லாந்து.

சுவிட்சர்லாந்தில் கொக்கோ விளைவதில்லை. ஒரு கொக்கோ மரம் கூட இந்நாட்டின் காலநிலைக்கு ஏற்றதல்ல. ஆனால் உலகின் சிறந்த சாக்லேட்டுகள் இங்குதான் உருவாகின்றன. மூலப்பொருள் வேறு கண்டத்தில் பிறக்கிறது. ஆனால் தரம் சுவிட்சர்லாந்தில் பிறக்கிறது.

வளம் இல்லாததைப் பற்றி இந்த நாடு புலம்புவதில்லை. இருப்பதை உலகின் சிறந்ததாக மாற்றுகிறது.

சுவிட்சர்லாந்தில் எண்ணெய் கிடையாது. இயற்கை எரிவாயு வளங்களும் கிடையாது. ஆனால் உலகின் மிகவும் வலுவான பொருளாதாரங்களில் ஒன்று இங்கே உருவாகியுள்ளது. ஏனெனில் அவர்கள் நிலத்தின் அடியில் இருக்கும் வளங்களை நம்பவில்லை. மனித மூளையின் உள்ளே இருக்கும் அறிவை நம்பினர்.

2026 தரவரிசையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லாட்சி ஆகிய பிரிவுகளில் சுவிட்சர்லாந்து முதலிடத்தைப் பெற்றிருப்பது இதற்குச் சான்றாகும்.

உயர்ந்த ஒருவருக்கான வருமானம்.

குறைந்த வேலைவாய்ப்பின்மை.

உலகத் தரத்திலான நிதிச் சேவைகள்.

மருந்துத் தொழில்.

உயர் தொழில்நுட்ப உற்பத்தி.

புதுமைகளை ஊக்குவிக்கும் ஆராய்ச்சி மையங்கள்.

இவை அனைத்தும் சேர்ந்து ஒரு வலுவான பொருளாதாரத்தை உருவாக்கியுள்ளன.

ஆனால் பொருளாதாரம் மட்டும் ஒரு நாட்டை உலகின் சிறந்த நாடாக மாற்ற முடியாது.

அதற்குத் தேவை நம்பிக்கை.

அந்த நம்பிக்கையின் பெயர்தான் நல்லாட்சி.

சட்டத்தின் ஆட்சி.

அரசியல் நிலைத்தன்மை.

நிர்வாக வெளிப்படைத்தன்மை.

ஊழலற்ற நடைமுறை.

இவை அனைத்தும் சுவிட்சர்லாந்தை உலகின் நம்பகமான நாடாக மாற்றியுள்ளன.

உலகின் பல முன்னணி நிறுவனங்கள் தங்கள் பிராந்திய தலைமையகங்களையும் ஆராய்ச்சி மையங்களையும் இங்கே நிறுவுவதற்குக் காரணம் இதுவே.

உலகின் பல நாடுகள் ஒரே மொழியைக் கொண்டும் ஒற்றுமையற்றுப் போகின்றன. ஆனால் சுவிட்சர்லாந்து நான்கு தேசிய மொழிகளைக் கொண்டும் ஒற்றுமையாக வாழ்கிறது.

ஜெர்மன். பிரெஞ்சு. இத்தாலிய. ரோமான்ஷ். மொழிகள் வேறு. பண்பாடுகள் வேறு. ஆனால் தேசம் ஒன்று.

இதுவே ஜனநாயகத்தின் உயர்ந்த வடிவம்.

இந்த நாட்டின் மிகப் பெரிய அரசியல் அதிசயம் அதன் நேரடி மக்களாட்சிதான்.

உலகின் பல நாடுகளில் மக்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வாக்களிக்கிறார்கள்.

ஆனால் சுவிட்சர்லாந்தில் மக்கள் தொடர்ச்சியாக வாக்களிக்கிறார்கள்.

சட்டங்கள்.

அரசியலமைப்புத் திருத்தங்கள்.

தேசிய கொள்கைகள்.

சமூகத் தீர்மானங்கள்.

இவற்றில் மக்கள் நேரடியாக பங்கேற்கிறார்கள்.

இங்கு மக்களே இறுதி அதிகாரம்.

அரசியல் மக்களுக்காக அல்ல.



அரசியல் மக்களாலேயே. உலகின் பல நாடுகளுக்கு ஒரு நிரந்தரத் தலைவர் இருப்பார். ஆனால் சுவிட்சர்லாந்தில் அதிகாரம் ஒருவரின் கைகளில் குவிக்கப்படுவதில்லை. ஏழு உறுப்பினர்களைக் கொண்ட கூட்டாட்சி மன்றம் நாட்டை வழிநடத்துகிறது. அவர்களில் ஒருவர் ஒரு வருடத்திற்கு மட்டுமே ஜனாதிபதியாக இருப்பார்.

இங்கே பதவி முக்கியமல்ல.

பொறுப்புதான் முக்கியம்.

சுவிட்சர்லாந்தின் மகத்துவம் அதன் எல்லைகளுக்குள் மட்டுமே வாழ்வதில்லை.

அது உலகின் பல நாடுகளின் கைகளிலும் பயணிக்கிறது. உலகின் பல முன்னணி நாடுகளின் பணத்தாள்கள், கடவுச்சீட்டுகள் மற்றும் அடையாள ஆவணங்களின் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களில் சுவிஸ் நிறுவனங்களின் பங்களிப்பு அமைதியாகத் திகழ்கிறது.

உலகம் தனது பணத்தைப் பாதுகாக்க சுவிஸை நம்புகிறது.

10 ஆம் பக்கம் பார்க்க...

## கல்லாறு சதீஷின் ஆய்வோட்டம்



# பிரியாவிடை நிகழ்வு





மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் திருமதி கலாரஞ்சினி கணேசலிங்கம் அவர்களை கௌரவிக்கும் பாராட்டு மற்றும் பிரியாவிடை நிகழ்வு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் பணியாளர் நாயகம் அசேல குணவர்த்தனவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்ததுடன், சுகாதாரத் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அவரது அர்ப்பணிப்பான சேவையும், கடந்த 8 ஆண்டுகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வளர்ச்சிக்காக ஆற்றிய பங்களிப்பும் பாராட்டப்பட்டன.

இதன்போது பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், அவரது பதவிக்கால சாதனைகளை பதிவு செய்த சிறப்பு ஆவணப் புத்தகமும் வெளியிடப்பட்டது.

இவ்விழாவில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். முரளீஸ்வரன், கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜி. சுகுணன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் திருமதி மைத்திலி பாத்லட் உள்ளிட்ட மருத்துவ நிபுணர்கள், துறைசார் அதிகாரிகள் மற்றும் பெருந்திரளான சுகாதாரப் பணியாளர்கள், வைத்தியசாலை சமூகங்கள் கலந்து கொண்டு தங்களது வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

# மடு விழாவுக்கு வருகை தருவோர் ஆன்மீக நோக்கோடு வாருங்கள்

## குருமுதல்வர் தமிழ்நேசன் அடிகளார்

( வாஸ் கூஞ்ஞ)

மடுத் திருப்பதி ஒரு புனித ஸ்தலமாக இருக்கின்றது. மடு விழாவுக்காக மடு திருப்பதிக்கு வருகைத் தரும் பக்தர்கள் மக்கள் இவ்விடத்தின் புனிதத் தன்மையை பேணி பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி தயவுடன் வேண்டி நிற்கின்றோம் என மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி தமிழநேசன் அடினளார் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மருதமடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு இங்கு வருகைத் தரும் மக்களின் நலன்கருதி அவர்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள அத்தியாவசிய தேவைகளை மன்னார் அரசாங்க அதிபரின் தலைமையில் மீள் பரிசோதனை செய்யப்பட்ட கூட்டத்தைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி தமிழநேசன் அடினளார் இங்கு மேலும் தெரிவிக்கையில்

இந்த மடு புனித ஸ்தலம் பகுதியில் போதைவஸ்துப் பாவனை- மது பாவனை முற்றாக தடை செய்யப்பட்ட இடமாக இருக்கின்றது. அத்துடன் இங்கு வருகை தருகின்றவர்கள் இத்திருத்தலத்தை மதிக்கக்தக்க விதத்தில் உரிய ஆடைகளை அணிந்து அதாவது நாகரிகமான ஆடைகளை அணிந்து இப்புனித பிரதேசத்தின் சூழலுக்கு ஏற்றவாறு வருகை தருமாறு கேட்டு நிற்கின்றோம்.

இந்த நேரத்தில் முக்கிய விடயத்தையும் மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றோம். அதாவது திருவிழாவுக்கு முதல்நாள் வெஸ்பர் நடக்கும் ஆடி மாதம் முதலாம் திகதி வழிபாட்டுக்குப் பின்னர் போட்டிக்கோவுக்கு முன்னாலுள்ள வளாகத்தில் பக்தர்கள் தங்குவது வழமையானது.

இவர்கள் இவ்வாறு போட்டிக்கோவுக்கு முன்னால் தங்கும்போது அடுத்தநாள் காலை திருவிழா திருப்பலிக்கு



வருகை தரும் பக்தர்கள் பெரும் இடையூரை ஏற்படுத்துகின்றது.

மாலையில் அல்லது இரவு இந்த இடத்தில் தங்குபர்கள் இவர்களின் செயற்பாட்டினாலே இந்த இடம் மாசுப்படுத்தப்படுகிறது. குறிப்பாக சிறுவர்கள் குழந்தைகள் மலசலம் கழிப்பதற்கு தூர இடத்திற்கு போகமுடியாத நிலையில் அவ்விடத்திலேயே கழிக்க வேண்டிய நிலை காணப்படுவதால் அவ்விடம் மாசுப்படுத்தப்படுகிறது.

அத்துடன் அவ்விடத்திலிருந்து இரவு சாப்பிட்டபின் மீதிகளை அவ்விடத்தில் பரவலாக வீசுவதாலும் அந்த இடம் மாசுப்படும் நிலையும் உருவாகின்றது. இதனால் அடுத்தநாள் அதிகாலையில் திருப்பலிக்கு வருகை தரும் மக்கள் பல அசௌரியங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் எங்களுக்கு முறைப்பாடுகள் வந்ததின் நிமித்தமே நாம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

இவர்களை இதில் தங்கவைத்துவிட்டு அடுத்தநாள் காலையில் அவ்விடத்தை உடன் துப்பரவு செய்யவும் நேர அவகாசம் கிடையாது. இதனால்தான் இந்த மக்களுக்கு நாங்கள் வினயமாக கேட்பது வெஸ்பர் ஆராதனை முடிந்த பின்பு யாத்திரிகர்கள் தங்குவதற்கான மண்டபங்கள் இருக்கின்றன. இவற்றிலும் ஏனைய இடங்களிலும் இரவை கழிக்க முடியும் எனவும் இங்குள்ள நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ளும்படி கேட்டுள்ளார்.

இந்த இடம் மக்கள் தங்கள் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்யும் இடம் இது சுற்றுலா வந்து செல்லும் இடம் அல்ல. மக்கள் வருடா வருடம் ஒன்று சேர்ந்து பக்தி முயற்சியுடன் வந்து செல்லும் என்ற நோக்கத்தை மனதில் இருத்தி வருகை தரும் பக்தர்கள் அன்னையின் ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லும்படி வேண்டி நிற்கின்றோம்.

23ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள இத்திருவிழா ஆடி மாதம் முதலாம் திகதி மாலை ஆறு மணிக்கு மூவேளை செபத்துடன் மாலை வழிபாடு ஆரம்பமாகி நற்கருணை ஆராதனையும் இதைத் தொடர்ந்து நற்கருணை ஆண்டவரின் பவனியும் நடைபெறும்.

அடுத்தநாள் இரண்டாம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும் என மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி தமிழநேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

இத்திருவிழா திருப்பலியானது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் மேதகு சாகர ஜெயமான ஆண்டகை அவர்களின் தலைமையில் இக்கூட்டுத் திருப்பலியாக நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடி படுகொலைக்கு தமிழர்களும், சத்துருக்கொண்டான் படுகொலைக்கு முஸ்லிம்களும் வெட்கப்பட வேண்டும்!







( வி.ரி.சகாதேவராஜா)

உலகத்தில் விடுதலை அமைப்பால் மத நிறுவனம் ஒன்றில் ஏதுமறியா மக்கள் கொல்லப்பட்டது காத்தான் குடியில் தான். தமிழன் என்று வகையிலே நான் வெட்கப்படுகின்றேன். அதேபோல், சத்துருக்கொண்டான் படுகொலையை முஸ்லிம் ஊர்காவல் படையினர் ஏகாதிபத்திய ஏவலில் செய்தார்கள்.அந்த வகையில் முஸ்லிம்களும் வெட்கப்பட வேண்டும்.

இவ்வாறு கொக்கட்டிச்சோலை பத்மநாபா அறிவியல் கழகத்தின் ஸ்தாபகர் தோழர் ஜோதி( பிரான்ஸ் ) காட்டமாக கூறினார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 36 வது நினைவு தின நினைவேந்தல் நிகழ்வு (27) சனிக்கிழமை மகிழடித்தீவு கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்ற பொழுது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

அங்கே பிரதம அதிதியாக ஏ. திரேசகுமாரன் கலந்து சிறப்பித்தார்

தோழர் ஜோதி அங்கு மேலும் தெரிவிக்கையில்.. சமகால அரசு ஜேவிபி சிந்தனை கொள்கை உடையது. இருந்த பொழுதிலும் இலங்கையில் மதவாத மற்ற இனவாதமற்ற ஊழலற்ற அரசாங்கத்தை ஏற்படுத்த போகிறோம் என்று சொல்வதை வரவேற்கின்றோம்.

மூவினங்களும் வாழ்கின்ற கிழக்கு மாகாணத்திலே ஒற்றுமை இல்லாவிட்டால் எந்த இனமும் நிம்மதியாக வாழ முடியாது . இங்கு மதவாதத்தை தலை தூக்க இடம் அளித்தால் நிச்சயம் தோல்வியில் முடிவடையும்.

காரணம் அமெரிக்க ஏகாதிபத்தியம் என்று கூற முடியாது. இங்கிலாந்து என்றொரு நாடு இருக்கின்றது. படுமோசமான நாடு.அங்கிருந்துதான் அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் பலர் இருக்கிறார்கள்.

அவர்கள் தான் இங்கு தேசிய இனங்களிடையே பிரிவினை ஏற்படுத்த பார்ப்பார்கள். முடியாவிட்டால் மதம் முரண்பாடுகளை தோற்றுவிப்பார்கள்.

எனவே தான் இலங்கையில் எதிர்காலத்தில் மதம் முரண்பாடுகளை தோற்றுவிப்பதற்கான அடித்தளம் இடப்படுகின்றதோ என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது . ஆகவே கிழக்கில் வாழ்கின்ற மூன்று இனங்களும் குந்தி இருந்து பேச வேண்டும். எதிர்கால சந்ததி நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால் எம்மிடையே முரண்பாடுகள் குறிப்பாக மத முரண்பாடுகளை உருவாகக்கூடாது. தேசியம் பேசுவோர் இங்கு எதுவுமே செய்யப்போவதில்லை. என்றார். அங்கு ஈபிஆர் எல்எவ் ஸ்தாபக தலைவர் நாபா தோழருக்கும் ஏனைய தியாகிகளுக்கும் மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தப்பட்டதோடு, கல்வியை ஊக்குவிக்க நோக்கில் பலதரப்பட்ட வேலைத்திட்டங்களை பல கோடி ரூபாய் செலவில் முன்னெடுத்திருகின்றார்கள் .அதற்கான உதவிகள் மேடையிலேயே வழங்கப்பட்டன.

# கல்முனை ஆதார வைத்தியசாலையின் சிறந்த உன்னத சேவைகளை

# கண்டு வியந்து பாராட்டு!









**( வி.ரி.சகாதேவராஜா)**

சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தனா, கல்முனை ஆதார வைத்தியசாலையின் சிறந்த சேவை, தூய்மை மற்றும் டிஜிட்டல் செயல்முறை மேம்பாடுகளை நேரில் கண்டு, வியந்து பாராட்டினார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர். அசேல குணவர்த்தனா(28) ஞாயிற்றுக்கிழமை கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை நேரில் பார்வையிடும் நோக்கில், விஜயம் செய்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தனவை, வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தலைமையிலான வைத்தியசாலை சமூகம் மாலை சூட்டி வரவேற்றது.

இவ் விஜயத்தின் போது, புதிய ஆய்வு கூடத்தை பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலையின் டிஜிட்டல் மைய வெளிநோயாளர் பிரிவைப் பார்வையிட்ட அவர், நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சை வசதிகள் மற்றும் சமையலறை கழிவுகளஞ்சியம் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு என்பு முறிவுப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு விசேட பிரிவுகள் விடுதிகளை ஒரு மணிநேரம் நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து சுகாதார சேவைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக முகாமைத்துவ குழுவினருடன் விரிவாக கலந்துரையாடினார்.

பின்னர் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில், வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் குண.சுகுணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பணிப்பாளர் நாயகம் விசேட உரையாற்றினார்.

அதன்போது, இன்றைய தரிசிப்பு பூரண திருப்தியளித்ததாகவும், ஒரு கணம் வியந்ததாகவும், டாக்டர் சுகுணன் தலைமையிலான வைத்தியசாலை சமுகத்தைப் பாராட்டுவதாகவும், வைத்தியசாலையின் எதிர்கால முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளுக்கும் சுகாதார அமைச்சின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தார்.

வைத்தியசாலை குழுவின் பிரதித் தவிசாளர் வி.ரி.சகாதேவராஜா, தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட நான்கு அம்ச குழுவின் கோரிக்கைகளை முன்வைத்து உரையாற்றி நன்றியுரையையுமாற்றினார்.

நாட்டின் சுகாதாரத் துறைக்கு ஆற்றிவரும் அர்ப்பணிப்புமிக்க சேவையையும் சிறந்த தலைமைத்துவத்தையும் பாராட்டும் வகையில், டாக்டர் அசேல குணவர்தனவிற்கு பணிப்பாளர் சுகுணன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் உள்ளிட் நான்கு அம்ச குழுவின் கோரிக்கைகளடங்கிய வைத்தியசாலை குழுவின் மகஜரை குழுவின் தவிசாளர் சந்திரசேகரம் ராஜன் மற்றும் பிரதித் தவிசாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர், பணிப்பாளர் நாயகத்திடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் பி.சிறிசங்கர், திட்டமிடல் வைத்திய அதிகாரி மருத்துவர் வினோதினி, விசேட வைத்திய நிபுணர்கள், கணக்காளர் ,பிரதம தாதியர்,வைத்தியசாலை அபிவிருத்திக் குழுத் தவிசாளர் சந்திரசேகரம் ராஜன், பிரதித் தவிசாளர் வி.ரி.சகாதேவராஜா,பொருளாளர் இ.ரூபசாந்தன் மற்றும் வைத்தியசாலையின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

# வந்தாறுமூலை மக்களின் கவனயீர்ப்பு போராட்டம்




மட்டக்களப்பு, வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகம் தமது கிராமத்திற்குச் செல்லும் வீதியை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி, அப்பகுதி மக்களும் பொது அமைப்புகளும் இணைந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் ஞாயிற்றுக்கிழமை (28) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு யுத்த காலப்பகுதியில், தமது கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதி மூடப்பட்டதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், கிழக்குப் பல்கலைக்கழகம் சுற்றுமதில் அமைத்ததால் தங்களது கிராமத்திற்கான வீதி முற்றிலும் தடைப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட மக்கள், தமக்கான வீதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனக் கோரி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்குத் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், விவசாய மற்றும் காணி அமைச்சின் இணைப்புச் செயலாளருமான ந. திலகநாதன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் என். நாகேந்திரன் ஆகியோர் வருகை தந்து, மக்களின் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்களது நியாயமான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அவர்களிடம் கையளித்தனர்.



# அரசு குறிவைக்கிறதா? கிழக்கில் காணிகளை

கிழக்கு மாகாணத்தில் காணி விவகாரங்களைக் கையாள்வதற்காக விசேட குழுவொன்றையும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான முழு அதிகாரம் கொண்ட விசேட பொலிஸ் பிரிவொன்றையும் அமைப்பதற்கு கடந்த ஜூன் 22 ஆம் திகதி அமைச்சரவை எடுத்துள்ள தீர்மானம் சட்டவாச்சியை மற்றும் கிழக்கு மக்களின் அடிப்டை உரிமையினை மீறும் செயலை இலங்கை நீதிக்கான மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டவிரோத காணி ஆக்கிரமிப்பு மற்றும் கடலோரப் பகுதி அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துவதாகக் கூறி கொண்டுவரப்பட்டுள்ள இந்த விசேட பொறிமுறையானது, சிறுபான்மையினர் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தை மட்டும் குறிவைத்து எடுக்கப்பட்ட ஒரு தன்னிச்சையான நடவடிக்கை என்ற கடுமையான குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள சமத்துவத்திற்கான அடிப்படை உரிமையை இந்த முடிவு அப்பட்டமாக மீறுவதாகத் தெரிவித்து, இலங்கை நீதிக்கான மய்யம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கு மிக அவசரமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதுடன், இந்த சர்ச்சைக்குரிய அமைச்சரவை தீர்மானத்தை உடனடியாகக் கைவிடுமாறு அல்லது இடைநிறுத்துமாறு உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

காணி ஆக்கிரமிப்புகளும், அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களும் கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் பிரத்தியேகமான பிரச்சினைகள் அல்ல எனவும், தெற்கு, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் பரவலாகக் காணப்படும் ஒரு தேசியப் பிரச்சினையாகும் எனவும் நீதிக்கான மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏனைய மாகாணங்களை விடுத்து, தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் பல்லின சமூகமாக வாழும், யுத்தத்திற்குப் பின்னரான காணி இழப்புகளால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தை மட்டும் இவ்வாறு அதிகாரம் வாய்ந்த விசேட குழுவினை நிறுவுவது மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவிக்கும்.

இன, மத, பிராந்திய பாகுபாடுகளின்றி சட்டத்தின் முன்னால் அனைவரும் சமமாக நடத்தப்படவேண்டும் என அரசியலமைப்பின் 12(1) மற்றும் 12(2) உறுப்புரைகள் மிகத் தெளிவாக உத்தரவாதம் அளித்துள்ள நிலையில் , இந்த தனியொரு மாகாண பொறிமுறையானது அரசியலமைப்பு வழங்கும் அடிப்படை உரிமைகளுக்கு முற்றிலும் முரணானது என சுட்டிகாட்ட விரும்புகின்றோம்.

மேலும், காணி ஆக்கிரமிப்புகளை அகற்றவும், சட்டவிரோத கட்டுமானங்களை தடுக்கவும் 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அரசு நிலங்கள் சட்டம் Act No. 07 of 1979 அரச காணிகள் சட்டம், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், மற்றும் கடலோரப் பாதுகாப்புச் சட்டம் என இலங்கையில் ஏற்கனவே போதுமான மற்றும் பலமான சட்டக் கட்டமைப்புகள் காணப்படுகின்றன.

மகாவலி அதிகாரசபைக்கு உட்பட்ட காணிகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் தற்போதிருக்கும் சட்டங்களைக் கொண்டே, பிரதேச செயலாளர்கள் மற்றும் பொலிஸார் ஊடாகத் தீர்க்க முடியும் எனும் போது, புதிய குழுக்களை எதற்காக என்ற கேள்வி பலமாக எழுப்பப்படுகின்து.

தற்போது இலங்கைக்குத் தேவைப்படுவது நாட்டிலுள்ள தற்போதைய சட்டங்களை ஒன்பது மாகாணங்களுக்கும் பாரபட்சமின்றி, சமமாக அமல்படுத்துவதற்கான அரசியல் விருப்பம் மட்டுமே ஆகும் என்றும் இலங்கை நீதிக்கான மய்யம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, ஜூன் 22 அன்று எடுக்கப்பட்ட இந்த அமைச்சரவை முடிவை உடனடியாக நிறுத்தி வைத்து, வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பொது மக்கள் ஆலோசனைகளை நடத்துமாறும், சட்டத்தை நாடு முழுவதற்கும் பொதுவானதாக சமத்துவத்தின் அடிப்படையில் அமுல்படுத்துமாறும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் இலங்கை நீதிக்கான மையம் கோரிக்கை விடுத்துள்ளது.

# பிள்ளையான் மீண்டும் உள்ளே




பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் என்கின்ற பிள்ளையானை எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை (30) மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிள்ளையானுக்கு, நீதிமன்றம் இந்த விளக்கமறியல் உத்தரவினை பிறப்பித்துள்ளது.

கடந்த 14 நாட்களுக்கு முன்னர் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 6 குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் இன்றைய தினம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பிள்ளையான் நீதிமன்றத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு, ஆஜர்படுத்தப்பட்டார்.

# இவ்வருடம் மாகாணத் தேர்தல் நடத்தப்பட வாய்ப்பே இல்லை!



மாகாண சபைத் தேர்தல் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி மீண்டும் கூடவுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதில் நிலவும் முட்டுக்கட்டைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்:-

‘அரசு தனது முடிவை எடுப்பதற்கு மேலதிகமாக மூன்று மாத கால அவகாசம் கோரியுள்ளது. இதனால் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதில் தொடர்ச்சியான தாமதங்கள் நீடித்து வருகின்றன. இதன் காரணமாக இந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் எவையும் காணப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முதலாவது கூட்டத்திலேயே நான், மனோ கணேசன், சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் நிசாம் காரியப்பர் உள்ளிட்ட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தோம். எனினும், அரசின் தொடர்ச்சியான தாமதங்கள் காரணமாக, ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட மூன்று மாத காலக்கெடுவைத் தாண்டியும் இந்தச் செயன்முறை நீண்டு செல்கின்றது.

பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதே எதிர்க்கட்சியின் முதன்மை முன்மொழிவாக உள்ளது. இந்தக் கட்டமைப்புக்குள் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான கட்டாயப் பிரதிநிதித்துவத்தை அரசு கோரியுள்ளது. எவ்வாறாயினும், எதிர்க்கட்சிகள் அதனைத் தனிச் சட்ட ஏற்பாடாகக் கொண்டு வராவிட்டாலும், 25 சதவீத ஒதுக்கீட்டை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக இணக்கம் வெளியிட்டுள்ளன.

இருப்பினும், தெரிவுக்குழு தனது பணிகளைத் தொடங்கி மூன்று மாதங்கள் கடந்தும் முறையான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இந்த மந்தகதி நிலைமையானது, இந்த ஆண்டுக்குள் தேர்தல் நடத்தப்படாது என்ற எங்களின் சந்தேகத்தை உறுதிப்படுத்துகின்றது.’ - என்றார்.

# அரசாங்க ஊழியர்களை அவமதிக்கும் தற்போதைய ஆட்சி



வரலாற்றில் என்றுமில்லாத வகையில் தற்போதைய அரசாங்கம் அரச ஊழியர்களை மிக மோசமாக அவமதித்து வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விசனத்தை வெளியிட்டார்.

கடந்த காலத்தில் அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சொந்தமாக வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளுடன் கூடிய எதிர்காலம் ஒன்று உருவாக்கிக் கொடுக்கப்பட்ட போதிலும், தற்போதைய ஆட்சியில் அவர்களுக்கு 20 கிலோ அரிசியைக் கடனாக வழங்கும் அவல நிலையே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நாட்டின் அரச ஊழியர்களே திரண்டு சென்று தபால் மூலம் வாக்களித்து இந்த ஆட்சியை உருவாக்க உதவினார்கள் எனக் குறிப்பிட்ட அவர், இன்று அதே அரச ஊழியர்களை ‘திருடர்கள்’ என்று அமைச்சர் லால் காந்த பகிரங்கமாக விமர்சித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அரச ஊழியர்களை இவ்வளவு அவமதிக்கும் மற்றும் பழிவாங்கும் ஒரு நிர்வாகம் இதற்கு முன்னர் இலங்கையில் இருந்ததில்லை என்றும், இது வரலாற்றிலேயே மிக மோசமானதொரு ஆட்சி என்றும் அவர் மேலும் சாடினார்.

அதேவேளை, தற்போதைய அரசாங்கத்திடம் நாட்டின் வளர்ச்சிக்கான எந்தவொரு முறையான திட்டமும் இல்லை எனத் தெரிவித்த விமல் வீரவன்ச, தினம் இருவரை என்ற கணக்கில் கைது செய்வது மட்டுமே இந்த அரசாங்கத்தின் பிரதான வேலைத்திட்டமாக மாறியுள்ளதாகக் குறிப்பிட்டார். ஏதாவது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி, தினமும் இருவர் வீதம் கைது செய்து, அதன் மூலமே இந்த அரசாங்கம் தங்களைத் தக்கவைத்துக் கொள்ளப் பார்ப்பதாகவும் அவர் தனது ஊடக அறிக்கையில் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

# யாழுக்கு புதிய ஆயர்



யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை, திருத்தந்தை 14ஆம் லியோ ஆண்டகையினால் நேற்று திங்கட்கிழமை (29) நியமனம் பெற்றுள்ளார்.

1966ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தீவகத்தில் பிறந்த இவர் 2000ஆம் ஆண்டு கொழும்பு மறைமாவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பல இடங்களிலும் சமய, கல்வி மற்றும் நிர்வாகப் பணியாற்றியுள்ளதுடன் உரோமில் இறையியல் பட்டத்தையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் இளங்கலைப் பட்டத்தையும் கொழும்பில் கல்வியியல் டிப்ளோமாவையும் ஐக்கிய இராச்சியத்தில் கல்வியியலில் முதுகலைப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமானி, கலைமானிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதி அப்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகையினால் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயராக நியமிக்கப்பட்டு 2020ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் திகதி ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டதுடன் 2024ஆம் ஆண்டு ஆவணி 19ஆம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகராகவும் நியமனம் பெற்று பணியாற்றி வருகிறார்.

தற்போதைய ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஓய்வு காரணமாக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயராக பணியாற்றி வந்த இவர் யாழ். மறைமாவட்ட ஆயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# இடிந்து விழுந்த பாலம்; தற்காலிக பெய்லி பாலம் நடவடிக்கை!



மட்டக்களப்பில் அண்மையில் இடிந்து வீழ்ந்த புதிய பாலத்துக்கு மாற்றாக, தற்காலிக பெய்லி ரக பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் தொடர்பான அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

இதற்கான கட்டுமானப் பணிகள் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்றும், அவற்றை விரைவாக முன்னெடுக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சுமார் 40 ஆண்டுகள் பழமையான இந்த பாலத்தில் ஏற்பட்டிருந்த வெடிப்புகள் தொடர்பாக ஏற்கனவே தொழில்நுட்ப அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 28ஆம் திகதி மாலை பாலத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்தது.

இதனால் மட்டக்களப்பு நகருக்கான முக்கிய போக்குவரத்து பாதை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நிரந்தர புதிய பாலம் அமைக்கப்படும் வரை பொதுமக்களின் போக்குவரத்தை உறுதிப்படுத்தும் வகையில் தற்காலிக பெய்லி பாலம் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இடிந்து வீழ்ந்த இந்த பாலம், மட்டக்களப்பு நகருக்குள் நுழைவதற்கான முக்கிய இணைப்புப் பாலங்களில் ஒன்றாகும். மேலும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, பாடசாலைகள் மற்றும் பல முக்கிய அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செல்லும் பிரதான போக்குவரத்து வழியாகவும் இந்தப் பாலம் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# செம்மணி புதைகுழி உண்மைகள் முழுமையாக வெளிவர வேண்டும்

## அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

செம்மணியில் 600க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர் என சிறைக் கைதியாக இருக்கும் சோமரத்ன ராஜபக்ஷ முன்னர் கூறிய விடயம் இப்போது உண்மையாகவும் நம்பகமாகவும் காணக்கூடியதாக உள்ளது. இப்போது, இன்னும் இரண்டு புதைகுழிகள் உள்ளன எனும் கருத்தை கூறுகின்றார். இந்த விடயத்தில் அரசு கவனம் செலுத்தவேண்டும் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இக்கருத்தினை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

தற்போதைய நிலையில் இரண்டு விடயங்கள் நாட்டில் மக்களின் கவனத்தில் முக்கிய பேசுபொருளாக உள்ளன. ஒன்று, செம்மணி புதைகுழி. மற்றயது, சுரேஸ் சலே விடயங்கள்.

செம்மணியில் 600க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர் என சோமரத்ன ராஜபக்ஷ முன்னர் கூறிய விடயத்துடன் தற்போதய நிலையை பார்க்கும்போது இன்று 400க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழி சந்திரிக்கா அம்மையாரின் காலத்தின்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த விடயத்தில் ஒரு முக்கியமான சாட்சியான சிறையில் இருக்கும் சோமரத்ன ராஜபக்ஷ இப்போது வாய் திறக்கத் தொடங்கியிருக்கின்றார்.




அவரது மனைவி, கணவரின் கருத்துக்களை கூறிக் கொண்டிருக்கின்றார். இந்த விடயம் உண்மையான சாட்சியமாக கருதப்படுகின்றது. ஏனென்றால், கடந்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என மக்கள் சந்தேகம் தெரிவித்த நிலையில், இந்த சந்தேகத்தை வலுச் சேர்க்கும் வகையில் சோமரத்ன ராஜபக்ஷ பல விடயங்களை கூறிக்கொண்டிருக்கிறார். சில நிபத்தனைகளுடன் சுயாதீனமான விசாரணைக்கு உட்படுத்தும்போது சாட்சியாக பல உண்மைகளை கூறுவேன் என அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த 30 ஆண்டுகளாக புதைக்கப்பட்ட உண்மைகள் வெளியில் வரக்கூடாது என்பதற்காக பல சாட்சியங்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சில சாட்சியங்களை வாய் திறக்காதவாறு அடைத்து வைத்திருக்கின்றார்கள். எனவே இந்த சோமரத்ன ராஜபக்ஷ என்பவரை நியாயமான விசாரணைக்கு உட்படுத்தும்போது கொலையாளிகள் பற்றியும் இச்சம்பவங்களின் பிரதான சூத்திரதாரி யார் யார் என்பதையும் அறியமுடியும்.

அரசு நல்ல விடயங்களை செய்கின்றபோது குற்றவாளிகளை கைது செய்கின்றபோது, நீதியை தேடுகின்றபோது, உண்மையை தேடுகின்றபோது நாங்கள் அந்த விடயத்துக்கு ஆதரவளிப்போம்.

எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் தாங்கள் செய்த குற்றங்களை கண்டுபிடிக்கும்போது துடிக்கின்றார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்காவிட்டால் ஜி.எஸ்.பி. சலுகை கிடைக்காமல் போய்விடும் என முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்.

அந்த காலத்தில் எத்தனையோ அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்படும்போது சட்டம் தெரிந்தவர் அதிகாரத்தில் அமைச்சராக இருந்தவர் ஏன் வாய் திறக்கவில்லை? இப்போது வாய் திறக்கிறார் என்றால் வடிகட்டிய இனவாதத்தை வெளிப்படுத்துகிறார்.

அறிவுஜீவிகளான பேராசிரியர் ரவீந்திரநாத், சிவராம், நடேசன், சந்திரநேரு, ஜோசப் பரராஜசிங்கம், சுகிர்தராஜன், தம்பையா... இப்படி பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இப்படி எல்லோரையும் அழித்துள்ளனர்.

தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது போல் இந்த பயங்கரவாத தடைச் சட்டமானது வினை விதைத்தவர்கள் மீது பாயத் தொடங்கியிருக்கின்றது.

ஆகவே இதனை சரியான முறையில் நீதியாக நியாயமான முறையில் விசாரணை செய்கின்ற போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி யார், செம்மணி படுகொலை செய்த அரச பயங்கரவாதிகள் யார் என்பதை கண்டறிய முடியும். சோமரத்ன ராஜபக்ஷ, ஆசாத் மௌலானா போன்றோரை பயன்படுத்தி விசாரணை செய்தால் உண்மை வெளிப்படும் என தெரிவித்தார்.

# சுவிஸ் தமிழர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் வணிகப் பாலம் 2026




சுவிட்சர்லாந்தில், சுவிஸ் தமிழர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் (STEDO) ஏற்பாடு செய்த வணிகப் பாலம் 2026 நிகழ்வு வெற்றிகரமாக அண்மையில் நடைபெற்றது.

ஜூன் 14 ஆம் தேதி ஆர்காவ் மாநிலத்தின் மெகன் வில்லிங்ன் பகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வு, தமிழ் சமூகத்தின் வணிக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

நிகழ்வில் தொழில்முனைவோர், வணிகர்கள் மற்றும் இளைய தலைமுறையினர் உற்சாகமாக பங்கேற்று புதிய வணிகத் தொடர்புகளை உருவாக்கியதுடன், எதிர்கால ஒத்துழைப்புகளுக்கும் வழி வகுத்துள்ளனர்.

சுவிட்சர்லாந்து முழுவதும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் பொருளாதார தளமாக குகூஉஈநீ தன்னை நிலைநிறுத்தும் முயற்சியில் இது ஒரு முக்கிய கட்டமாக பார்க்கப்படுகிறது.

அடுத்த தலைமுறையினரையும் இணைத்து, நீண்டகால சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும் நோக்குடன் இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது என நிறுவனத்தின் தலைவர் இளையதம்பி ஸ்ரீதாஸ் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அண்மையில் காலம் இயக்குனர் பாரதிராஜாவின் உருவப்படத்திற்கும் மலர்மாலை அணிவித்து சுவிஸ் தமிழ் வர்த்தகர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டமை விசேட அம்சமாகும்.

## சுவிஸ் செய்தி துளிகள்....

### டிசினோவில் காட்டுத்தீ அபாயம் அதிகரிப்பு

சுவிட்சர்லாந்தின் டிசினோ மாகாணத்தில் கடுமையான வெப்பம் மற்றும் நீடித்த வறட்சியால் காட்டுத்தீ அபாயம் அதிகரித்துள்ளது. சில பகுதிகளில் தீ பரவிய நிலையில், பொதுமக்கள் காடுகளுக்குச் செல்வதைத் தவிர்க்கவும், திறந்த வெளியில் தீ மூட்ட வேண்டாமெனவும் அதிகாரிகள் அறிவுறுத்தி யுள்ளனர்.

### நைஜீரியாவிற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப்பொருட்கள் மீளளிப்பு

சுவிட்சர்லாந்தின் மூன்று அருங்காட்சியகங்களில் பாதுகாக்கப்பட்டிருந்த 18 பெனின் வெண்கலச் சிற்பங்கள் அதிகாரப்பூர்வமாக நைஜீரியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. காலனித்துவ காலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட கலாசாரப் பொருட்களை தாய்நாட்டிற்கு மீண்டும் வழங்கும் நடவடிக்கை யின் முக்கிய நிகழ்வாக இது கருதப்படுகிறது.

### சுவிஸ் தேசிய வங்கியின் வெளிநாட்டு நாணய கொள்முதல்

சுவிஸ் தேசிய வங்கி (SNB), 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சுமார் 3.94 பில்லியன் சுவிஸ் பிராங்க் மதிப்பிலான வெளிநாட்டு நாணயங் களை வாங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. சுவிஸ் பிராங்கின் மதிப்பு அதிக மாக உயர்வதை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

### தொழிலதிபர் Pascal Jaussiz-க்கு 51/2 ஆண்டு சிறைத்தண்டனை

Swiss Elon Musk என்று ஊடகங்களில் அழைக்கப்பட்ட தொழிலதிபர், மோசடி மற்றும் ஆவணக் கள்ளப்பதிவு உள்ளிட்ட பல குற்றங்களில் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்து ஐந்தரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

### அமெரிக்காவுடன் வர்த்தக பேச்சுவார்த்தை தொடர்கிறது

சுவிட்சர்லாந்து மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான வர்த்தக பேச்சு வார்த்தையில் இதுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. இருப்பினும், இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடிவு செய்துள்ளன.

### சுவிட்சர்லாந்தில் கடும் வெப்ப அலை

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை 35-39 KC வரை பதிவாகியுள்ளது. இதனால் முதியவர்கள், சிறுவர்கள் மற்றும் உடல்நலப் பிரச்சினையுள்ள வர்கள் தேவையற்ற வெளிப்பயணங்களைத் தவிர்க்குமாறு சுகாதார அதி காரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

### அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தத்திற்காக புதிய நடவடிக்கை

சுவிட்சர்லாந்து, அமெரிக்காவுடன் நடைபெற்று வரும் வர்த்தக பேச்சு வார்த்தையை முன்னேற்றும் நோக்கில், கார்கள் மற்றும் மருத்துவ உபக ரணங்களுக்கான சில அமெரிக்க தரநிலைகளை அங்கீகரிக்கும் விதிகளை தளர்த்தத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மேலும் எளிதாகும் என அரசு நம்புகிறது.

### பொருளாதார வளர்ச்சி குறித்து எச்சரிக்கை

சர்வதேச நாணய நிதியம் (IMF), 2026ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தின் பொருளாதார வளர்ச்சி மந்தமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது. இதற்கு உலகளாவிய வர்த்தக மந்தநிலை மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் முக்கிய காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும், 2027ஆம் ஆண்டில் மீள்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வெப்பம் காரணமாக தீ அபாயம்

நாட்டின் பல காடுகள் மற்றும் மலைப்பகுதிகளில் காட்டுத்தீ அபாயம் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். பொதுமக்கள் திறந்த வெளியில் தீ மூட்டுவதைத் தவிர்க்குமாறும், அதிகாரப்பூர்வ அறிவுறுத்தல் களைப் பின்பற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ள

# சுவிஸ் தமிழர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் வணிகப் பாலம் 2026



## உலகின் முதல் தர நாடாக மீண்டும் சுவிட்சர்லாந்து

தனது ஆவணங்களைப் பாதுகாக்க சுவிஸை நம்புகிறது.

தனது நம்பிக்கையைப் பாதுகாக்கவும் சுவிஸை நம்புகிறது. அதுமட்டுமல்ல.

வானத்தில் பறக்கும் சொகுசு விமானங்களின் உள்துறை வடிவமைப்புகளிலும் சுவிஸ் துல்லியம் தனது கையொப்பத்தைப் பதித்தி ருக்கிறது.

மண்ணில் நடக்கும் மனிதனின் அடையா ளத்திலிருந்து மேகங்களின் மீது பறக்கும் விமானங்களின் நேர்த்திவரை, தரம் என்ற சொல்லுக்கு சுவிட்சர்லாந்து ஒரு புதிய பொருளை வழங்கியுள்ளது.

இந்த நாட்டின் வெற்றி ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல.

அது நூற்றாண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையின் கட்டிடம்.

நேர்மையின் பலன்.

ஒழுக்கத்தின் அறுவடை.

மக்களாட்சியின் வெற்றி.

சட்டத்தின் மரியாதை.

மனித கண்ணியத்தின் கொண்டாட்டம்.

நான் சில நேரங்களில் ஒரு சிந்தனையை மனதில் வைத்துப் பார்க்கிறேன்.

கடவுள் இந்த உலகில் ஒரே ஒரு நாட்டை மட்டும் படைக்க நினைத்திருந்தால், அவர் சுவிட்சர்லாந்தைப் போன்ற ஒரு நாட்டைத்தான் படைத்திருப்பார் என்று.

ஏனெனில் இங்கு மலைகள் இருக்கின்றன.

ஆறுகள் இருக்கின்றன.

அமைதி இருக்கிறது.

சுதந்திரம் இருக்கிறது.

பொறுப்பு இருக்கிறது.

மனித மரியாதை இருக்கிறது.

முக்கியமாக, மக்களை நம்பும் ஒரு அரசும், அரசை நம்பும் மக்களும் இருக்கிறார்கள்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் சுவிட்சர் லாந்தைப் புகழ்வது அல்ல.

ஒரு நாடு எப்படி உலகின் முதலிடத்தை அடை-கிறது என்பதைப் புரிந்துகொள்வதே.

சுவிட்சர்லாந்தின் மண்ணில் தங்கம் இல்லை.

ஆனால் நம்பிக்கை இருக்கிறது.

அதன் வயல்களில் கொக்கோ இல்லை.

ஆனால் தரம் இருக்கிறது.

அதன் நிலத்தில் எண்ணெய் இல்லை.

ஆனால் அறிவு இருக்கிறது.

அதன் அரசியலில் அதிகார வழிபாடு இல்லை.

ஆனால் பொறுப்புணர்வு இருக்கிறது.

அதன் சமூகத்தில் அச்சம் இல்லை.

ஆனால் சட்டத்தின் மீது மரியாதை இருக்கிறது.

அதனால்தான் உலகம் இன்று சுவிட்சர்லாந்தை ஒரு நாடாக மட்டும் பார்க்கவில்லை.

ஒரு சாத்தியமாகப் பார்க்கிறது.

ஒரு பாடமாகப் பார்க்கிறது.

ஒரு முன்மாதிரியாகப் பார்க்கிறது.

உலகின் முதல் தர நாடாக சுவிட்சர்லாந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அதன் வெற்றி அல்ல.

மனிதப் பண்புகள் இன்னும் தோற்கவில்லை என்பதற்கான வெற்றி.

நேர்மை இன்னும் மதிக்கப்படுகிறது என்பதற்கான வெற்றி.

மக்களாட்சி இன்னும் உயிரோடு இருக்கிறது என்பதற்கான வெற்றி.

நல்லாட்சி இன்னும் உலகை வெல்ல முடியும் என்பதற்கான வெற்றி.

ஒரு நாட்டின் மகத்துவம் அதன் மலைகளின் உயரத்தில் இல்லை.

அதன் மக்களின் மனங்களின் உயரத்தில் இருக்கிறது.

அந்த உயரத்தை அடைந்ததால்தான் இன்று சுவிட்சர்லாந்து உலகின் உச்சியில் நிற்கிறது.

முதல் இடத்தில் இருப்பதற்காக அல்ல.

மற்ற நாடுகள் எந்தத் திசையில் நடக்க வேண்டும் என்பதை அமைதியாகக் காட்டிக் கொண்டிருப்பதற்காகவே!













அருள்மிகு சிவன் கோவில் சைவத்தமிழ்ச்சங்கம் 27.6.2026 சனிக்கிழமை
மகோற்சவ திருவிழா ஒன்பதாம் நாள் பகல் தேர்த்திருவிழா சிறப்பு பூசை வழிபாடுகள்.